# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2007 / 20087
## HELD IN MARCH / APRIL – 2008

## TML 1.11 – LITERARY APPRECIATION AND PRESCRIBED TEXTS

(அ) பகுதியில் உள்ள இரு வினாக்களுக்கும் (ஆ) , (இ) பகுதிகளில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வினாவையேனும் தெரிந்து, எல்லாமாக **ஐந்து** (05) வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

### பகுதி - அ

01. இலக்கியம் குறித்து பல்வேறு அறிஞர்கள் கூறும் கருத்துக்களை எடுத்துக் கூறி அவை பற்றிய விமர்சன ரீதியான உங்களது அபிப்பிராயங்களை முன்வைக்குக.

02. (அ) மேல்வரும் செய்யுள்களை அவற்றின் பொருள் புலப்படும் வகையில் இக்கால உரைநடையில் எழுதுக.

i)
திரைநீர் ஆடை இரு நில மடந்தை
அரைசு கெடுத்த வலம் வரும் அல்லற்காலை
கறைகெழு குடிகள் கை தலை வைப்ப
அறைபோகு குடிகள் ஒரு திறம் பற்றி
வலம்படு தானை மன்னர் இல்வழி
புலம்பட இறுத்து விருந்தின் மன்னரின்
தாழ்துணை துறந்தோர் தனித்துயர் எய்த
காதலர் புணர்ந்தோர் களிமகிழ் வெய்தக்
குழல் வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய் வைத்தூத..........

ii)
வற்கலையின் உடையானை, மாசு அடைந்த மெய்யானை,
நற்கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானை,
கல் கனியக் கனிகின்ற துயரானை, கண்ணுற்றான்,
வில் கையினின்று இடை வீழ விம்முற்று நின்றொழிந்தான்.

'நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான், அயல் நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான், தவவேடம் தலை நின்றான்,
துன்பம் ஒரு முடிவு இல்லை, திசை நோக்கித் தொழுகின்றான்,
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு? என்றான்.

iii)
நானிலம் பரப்புஞ் சோதி நாயகக் கடவு தம்மை
வானகத் திருந்த சோதி வந்துசந் தித்ததோபோற்
கானமர் துண்டச் செங்கட் கலைநிலாத் தவழு மியாக்கை
யீனமில் சபுற யீல்வந் திறையவன் சலாமுஞ் சொன்னார்.

மரகதப் பத்தி கோலி வச்சிரத் தாரை சாத்தி
யுரகமா மணிக ணாப்ப ணொளிபெறக் குயிற்றி வெள்ளைத்
தரளமென் புருட ராகம் பலமணி தயங்கத் தாக்கிச்
சொரிகதிர் பரப்புஞ் சோதித் துகிலினைக் கரத்திற் கொண்டார்.

(ஆ) மேல்வரும் கவிதையில் நீர் காணும் நயத்தினைச் சுருக்கமாக விபரிக்குக.

**வீசாதீர்**

ஏதோ அவதியிலே ஏகுகிறீர்
ஏனப்பா,
நீர்தாம் உலகு நிலைமாறிப்
பாதாளத்
தாழ விழாமல் அதன் வாழ்வைக் காப்பவரோ?
வாழி, என் தாழ்மை வணக்கங்கள்!

ஆள்சுருளும்
வெய்யிலிலே
நீர்போகும் வீதி நடைப் பாதையிலே
உய்யும் வகை தெரியா ஓர் மனிதன்
கை இல்லான்,
தூங்குகிறான் போலக் கிடக்கின்றான்
துன்புறுத்தி
வீங்கும் பசியால் விழுந்தானோ!

ஆங்கயலிற்
கொத்தவரும் காகத்தைப் பாரும்
குறைஉயிரோ
செத்த உடலோ – தெளிவில்லை

சற்றெனினும்
நில்லாது, நெஞ்சில் நெகிழ்வேதும் காணாது,
சில்லறையில் ஒன்றை, செருக்கோடு
செல்லுங்கால்
வீசி விடுதல் விரும்பினீர்.

வேண்டாம் ஓய்!
கூசும் அவமதிக்கும் கொள்கையேன்?
ஆசைமிக
ஆதலினால், காசு கணீரென்றிட அதிரும்
காதுடையான்
அன்னோன் கடுந்தூக்கம்
பாதியிலே
கெடுக்காதீர். பாவம் இம்
மட்டும் புவியை மறந்திருந்தான்;

கிட்டப்போய்
மெல்லக் குனிந்து இடுக
இல்லையெனில் உம்பாட்டில்
செல்க.
இதுவே சிறப்பு.

## பகுதி - ஆ

03. ‘குகப்’ படலத்தில் குகன் - பரதன் சந்திப்பின் உணர்ச்சிகரமான நிலைகளைக் கம்பன் சித்திரிக்குமாற்றைத் தெளிவுறுத்துக.

04. ‘சீறாப் புராணத்தில் இடம் பெற்றுள்ள பாத்திர வர்ணனைகள் தமிழ்க் காவிய மரபைப் பேணி அமைந்துள்ளன’ – நபிப்பட்டம் பெற்ற படலத்தினை ஆதாரமாகக் கொண்டு இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

## பகுதி - இ

05. தமிழ்க் கவிதை வரலாற்றில் பாரதியின் வகிபாகத்தை மதிப்பிடுக.

06. தமிழ்ச் சிறுகதையுலகின் மன்னனாகப் புதுமைப்பித்தன் இன்னும் பேசப்படுவதற்கான நியாயங்களை மதிப்பிடுக.

07. "'மஹாகவி' யின் கவிதைகள் அவரிடத்தேயுள்ள மானிடநேயத்தை புலப்படுத்துவனவாக அமைகின்றன." ஆராய்க.

08. ந. பிச்சமூர்த்தியின் கவிதைகளின் உள்ளடக்கம் குறித்து விமர்சிக்குக.

*****